பக்கங்கள்: 08

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 22 செவ்வாய்க்கிழமை 06.07.2021 கதிர் 109

## கொரோனாச் சட்டத்தை மீறிய 47,922 பேர் கைது

தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 343 பேர் கடந்த 24 மணிநேரத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண இன்று காலை தெரிவித்துள்ளார்.

☞2

# பஸிலுக்காக எம்.பி. பதவியை துறந்தார் ஜயந்த கெட்டகொட

### தெற்கு அரசியலில் பெரும் பரபரப்பு



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட, எம்.பி. பதவியை இன்று துறந்துள்ளார்.

இது தொடர்பான இராஜினாமாக் கடிதத்தை நாடாளுமன்ற செயலாளருக்கு அவர் அனுப்பி வைத்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றம் வருவதற்காகவே அவர் இவ்வாறு பதவி துறந்துள்ளார்.

பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றம் வருவது உறுதியாகியுள்ளமையால் தெற்கு அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# மணல் கொள்ளையர்களின் தாக்குதலில் 4 விசேட அதிரடிப் படையினர் படுகாயம்!

## அரியாலையில் இன்று அதிகாலை சம்பவம்; தப்பியோடியவர்களில் இருவர் மடக்கிப் பிடிப்பு

(இ.கலையமுதன்)

யாழ்., அரியாலைப் பகுதியில் மணல் கொள்ளையர்களுக்கும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பில் நான்கு பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மீது தாக்குதல் மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்ற மணல் கொள்ளையர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டு, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அரியாலை கிழக்குப் பகுதியில் இன்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

☞2

## 777 கிலோ மஞ்சள் நேற்று தீயிட்டு அழிப்பு



(ந.லோகதயாளன்)

சட்டவிரோதமான முறையில் இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக மன்னாருக்குக் கடத்தி வரப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்ட ஒரு தொகுதி உலர்ந்த மஞ்சள் மூடைகள் நேற்று மாலை தீயிட்டு அழிக்கப்பட்டுள்ளன.

☞2

## சிறுமி விற்பனை விவகாரம்: சிக்கும் முக்கிய பிரமுகர்கள்

### தேடல் வேட்டை தீவிரம்; இதுவரை 34 பேர் கைது

கொழும்பு,ஜூலை 06

கொழும்பு, கல்கிசைப் பகுதியில் 15 வயதுச் சிறுமி ஒருவர் பாலியல் தொழிலுக்காக இணையம் ஊடாக விற்பனை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி வருவதுடன், கைதுகளும் இடம்பெறுகின்றன .

இதன்படி மேலும் இரு முக்கிய புள்ளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் பிரபல இருதய சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவரும் உள்ளடங்குகின்றார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பில் மாலைதீவின்

☞2



## பூஸா சிறைக் கொத்தணி; 350 கைதிகள் அடையாளம்

பூஸா சிறைச்சாலையில் மேலும் 30 கைதிகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனக் காலி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

கடந்த முதலாம் ஆம் திகதி 40 கைதிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட

☞2

## மேலும் 4 கிராம சேவகர் பிரிவுகள் இன்றிலிருந்து முற்றாக முடக்கம்!

### நாரந்தனை வடமேற்கு தம்பாட்டியும் தனிமைப்படுத்தல்

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலால் மேலும் சில பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் ஒரு பிரதேசம் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, யாழ்ப்பாணம், மாத்தறை மற்றும்

☞2

நாளைய தினம் காலைக்கதிர் காலை இதழில் தரம் 8 இற்கான விஞ்ஞான பாட பயிற்சி வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

## 2 கோடி 90 இலட்சம் ரூபா பெறுமதியான கேரள கஞ்சாவுடன் யாழில் மூவர் கைது



(எஸ்.நிதர்ஷன்)

இந்தியாவிலிருந்து சட்ட விரோதமாக இலங்கைக்குக் கடத்தி வரப்பட்டதாகச் சந்தேகிக்கப்படுகின்ற 2 கோடி 90 லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய கேரள கஞ்சாவுடன் மூவர் யாழ்ப்பாணத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் இன்று அதிகாலை யாழ்.- கோவிலம் கடற்பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதன் போது நான்கு சாக்குகளில் இருந்து குறித்த கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன், கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் பூநகரி

☞2

Education Page

வாரம்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலைக்கதிர் பத்திரிகையில் மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் ஆங்கில பக்கத்திற்கு (Education page) தங்கள் பிள்ளைகளின் ஆங்கில மொழியிலான ஆக்கங்களை கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மறக்காமல் மாணவர்களின் முழுப்பெயர், பாடசாலை, தரம், தொடர்பு இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

Kalaikkathiredu@gmail.com

076 443 8622

## 777 கிலோ மஞ்சள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஒரு மாத காலப் பகுதியில் மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மீட்கப்பட்ட குறித்த உலர்ந்த மஞ்சள் கட்டி மூடைகளே இவ்வாறு அழிக்கப்பட்டன.

இதன்போது 28 மூடைகளில் பொதி செய்யப்பட்ட 777 கிலோ 600 கிராம் உலர்ந்த மஞ்சள் சுகாதார நடைமுறைக்கு அமைவாக தீயிட்டு அழிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பொலிஸாரினால் மன்னார் – தலைமன்னார் பிரதான வீதி தாரபுரம் காட்டுப் பகுதியில் வைத்து இந்த மஞ்சள் மூடைகள் தீயிட்டு அழிக்கப்பட்டுள்ளன.

இதன்போது உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் மன்னார் பொலிஸார் குறித்த பகுதிக்கு விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 2 கோடி 90 இலட்சம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மற்றும் கரைச்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, கடத்தலுக்குப் பயன்படுத்திய மீன்பிடிப் படகும் இலங்கைக் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

## கொரோனாச் சட்ட.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கமைவாக இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 47 ஆயிரத்து 922 ஆக உயர்வடைந்துள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## சிறுமி விற்பனை...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னாள் நிதி இராஜாங்க அமைச்சர் ஒருவரும் நேற்று கைதுசெய்யப்பட்டிருந்தார். அந்தவகையில் இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 34 பேர் சிக்கியுள்ளனர்.

பலகோணங்களில் பொலிஸ் விசாரணைகள் தொடர்கின்றன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

## மணல் கொள்ளை........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த பகுதியில் மணல் கொள்ளையில் கும்பல் ஒன்று ஈடுபட்டுள்ளது எனக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அப்பகுதிக்குப் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் விரைந்திருந்தனர். அங்கு மணல் கொள்ளையில் ஈடுபட்ட கும்பலை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்ய முற்பட்ட போது கொள்ளையர்கள் அவர்கள் மீது மணல் அள்ளுவதற்கு வைத்திருந்த உபகரணங்களால் தாக்குதல் நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த தாக்குதல் சம்பவத்தில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் 4 பேர் படுகாயமடைந்துள்ளனர். அதேவேளை, தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்ற மணல் கொள்ளையர்களில் இருவரைத் துரத்தி மடக்கிப் பிடித்துள்ளனர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர்.

படுகாயமடைந்த விசேட அதிரடிப் படையினர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரையும், மணல் கொள்ளை நடைபெற்ற இடத்தில் மீட்கப்பட்ட டிராக்டர் ஒன்றையும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்களிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், தப்பிச் சென்ற ஏனையவர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

## மேலும் 4 கிராம........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களுத்துறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 4 கிராம சேவகர் பிரிவுகள் இன்று காலை முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கொரோனா பரவல் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாரந்தனை வடமேற்கு கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட தம்பாட்டி பகுதி தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

மாத்தறை மாவட்டத்தின் மாத்தறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உயன்வத்தை மற்றும் உயன்வத்தை வடக்கு கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

களுத்துறை மாவட்டத்தின் தொடாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புஹாபுகொட கிழக்கு கிராம சேவகர் பிரிவின் மலபடவத்த பகுதி தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏறாவூர் 02 கிராம சேவகர் பிரிவு இன்று காலை 6 மணி முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது எனவும் இராணுவத் தளபதி மேலும் கூறியுள்ளார்.

## பூஸா சிறைக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பி.சி.ஆர். பரிசோதனையிலேயே 30 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த கைதிகள் தென், மேற்கு மாகாணங்களிலுள்ள நீதிமன்றங்களால் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் என்று சிறைச்சாலைகள் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொற்றுக்குள்ளான கைதிகள், தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

குறித்த தொற்றாளர்களுடன் பூஸா சிறைச்சாலையில் தொற்றுக்குள்ளான கைதிகளின் எண்ணிக்கை 350 ஆக உயர்வடைந்துள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

ZOOM மூலம் IELTS வகுப்பு
ஓய்வுபெற்ற ஆங்கில போதனாசிரியரின் zoom மூலமான IELTS (Academic/General) பரீட்சை வகுப்பு. தனிப்பட்ட கவனம். பயில விரும்புவோர் தொடர்பு கொள்க:-
076- 5500036



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# தாமதமாகும் நீதி!

**“தாமதிக்கும் நீதி மறுக்கப்பட்ட நீதியாகி விடுகின்றது.’**

**19 ஆம் நூற்றாண்டில் நான்கு தடவைகள் பிரிட்டிஷ் பிரதமராக இருந்த வில்லியம் கிளட்ஸ்டோன் கூறிய வாசகம் இது. நீதித்துறையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட முதுமொழி இது.**

**சிறுவர், சிறுமியர் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்படுகின்றமை தொடர்பான சம்பவங்களிலும் நீதி மறுக்கப்படுகின்றது அல்லது நீதி தாமதிக்கப்படுகின்றது என்ற அதிர்ச்சித் தகவலை புள்ளி விவரங்கள் தந்து நிற்கின்றன.**

**சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக எந்நேரத்திலும் 1929 என்ற இலக்கத் தொலைபேசி மூலம் அழைப்பு எடுத்து முறையிட முடியும் என தேசிய ‘சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை’ அறிவித்துள்ள நிலையில் கடந்த வருடம் 8 ஆயிரத்து 165 முறைப்பாடுகள் அதிகார சபைக்குக் கிடைத்துள்ளன.**

**சிறுவருக்கு எதிரான வன்முறைகள், பாலியல் துன்புறுத்தல்கள், கொடுமைப்படுத்தல் என நாலாயிரம் முறைப்பாடுகள் இந்த வருடத்தின் முதல் ஆறு மாத காலத்தில் மாத்திரம் கிடைத்திருக்கின்றன என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் முடித விதனபத்திரன தெரிவிக்கின்றார்.**

**இத்தகைய முறைப்பாடுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன, புலன் விசாரணைகள் நடத்தப்படுகின்றன, அக்குற்றங்களை இழைத்தோர் சட்டத்தின் முன் நிறுத்தப்படுகின்றனர், நீதிமன்ற விசாரணைகள் நடக்கின்றன என்றெல்லாம் கூறப்படுகின்றது.**

**ஆனால், தவறிழைத்தோர் தண்டிக்கப்படுகின்றனர் என்று திருப்தியோடு கூற முடியாத நிலைமையே நீடிக்கின்றது.**

**வெளியாகும் புள்ளி விவரத் தகவல்கள் எமக்கு அத்தகைய நிலைமையைத்தான் உறுதிப்படுத்தி நிற்கின்றன.**

**புள்ளிவிவரங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது பெரும்பாலும் முறைப்பாடுகளுக்கு உள்ளாவோர் சட்டத்தின் பிடியிலிருந்து இலகுவாகத் தப்பி விடுகின்றனர் என்ற செய்தியையே – முடிவையே – அது தருகின்றது.**

**சிறுவருக்கு எதிராக இழைக்கப்பட்ட பாலியல் வன்கொடுமை தொடர்பாக கடந்த வருடம் தொடுக்கப்பட்ட 2 ஆயிரத்து 55 வழக்குகளில் ஒன்றில் கூட குற்றம் சுமத்தப்பட்ட எவருக்கும் பொலிஸாரினால் தண்டனை வாங்கிக் கொடுக்க முடியவில்லை என விடயமறிந்த வட்டாரங்கள், புள்ளிவிவரங்களுடன் விசனம் தெரிவிக்கின்றன.**

**அவற்றில் 26 வழக்குகள் சிறுவர், சிறுமியருக்கு பாலியல் தொல்லை கொடுத்த குற்றச்சாட்டுகளைக் கொண்டவை; 76 வழக்குகளில் சிறுவர், சிறுமியர் கொடூரமாக நடத்தப்பட்டனர் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது; ஏனைய ஆயிரத்து 953 வழக்குகள் பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டுடன் கூடியவை.**

**சிறுவர், சிறுமியர் பாலியல் தொல்லைக்கு உட்படுத்தப்பட்ட 26 வழக்குகளில் குற்றத் தண்டனை ஏதும் இல்லாமல் ஒரு வழக்கு முடிவுறுத்தப்பட்டுள்ளது. ஏழு வழக்குகள் இப்போது சட்டமா அதிபர் முன் அல்லது நீதிமன்றத்தின் முன்னால் விசாரணைக்காக நிலுவையில் உள்ளன. 18 வழக்குகள் இன்னும் புலன் விசாரணையில் உள்ளன.**

**சிறுவர், சிறுமியர் கொடூரமாக நடத்தப்பட்டவை தொடர்பான 76 வழக்குகளில் ஒரே ஒரு வழக்கு குற்றத் தண்டனைத் தீர்ப்பு ஏதும் வழங்கப்படாமல் முடிவுறுத்தப்பட்டுள்ளது. 52 வழக்குகள் இன்னும் புலன் விசாரணை நிலையில் உள்ளன. எஞ்சிய 23 வழக்குகள் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் முன்னால் அல்லது நீதிமன்றத்தின் முன்னால் உள்ளன.**

**2019 ஆம் ஆண்டின் வழக்குகள் பற்றிய புள்ளி விவரங்களும் இதனையே வெளிப்படுத்தி நிற்கின்றன.**

**சிறுவருக்கு எதிரான வன்முறைக் குற்றங்கள், பாலியல் வன்முறைகள் புரிவோர் தொடர்பில் உரிய அளவில் – உண்மை நிலைமைக்கு ஏற்ப – முறைப்பாடுகள் கிடைப்பதில்லை. முறைப்பாடுகள் கிடைத்தாலும் பெரும்பாலும் குற்றமிழைத்தோர் சட்ட ரீதியாகத் தண்டிக்கப்படுவதில்லை. தப்பி விடுகின்றார்கள்.**

**புலன் விசாரணைகள் நடத்தப்பட்டு, வழக்குகள் தொடுக்கப்பட்டாலும் கூட குற்றமிழைத்தோர் சட்டத்தின் பிடியிலிருந்து தந்திரமாக நழுவி விடும் நிலைமையே நீடிக்கின்றது.**

**தொடுக்கப்பட்ட வழக்குள் பலவும் மற்றைய வழக்குகள் போல காலம் இழுபட்டுச் செத்துச் செயலிழக்கும் நிலைமையே தொடருகின்றது.**

**சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான சட்ட நடவடிக்கைகளைத் துரிதமாக கையாண்டு முடிப்பதற்குரிய புதிய பொறிமுறை ஒன்றை நாட்டின் நீதித்துறை ஏற்படுத்தாத வரையில் இவ்விவகாரத்தில் நீதி நிலைநாட்டப்படுவது என்பது துர்லபமே.**

# சிறகுகள் அமையம் நடத்தும் மாணவர்களுக்கான போட்டி

மாணவர்களின் ஆளுமை விருத்தியை அடிப்படையாகக் கொண்டு சிறகுகள் அமையம் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கான கதை சொல்லுதல் மற்றும் கதை எழுதல் போட்டிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கதை சொல்லல் போட்டி தரம் 1 தொடக்கம் தரம் 6 வரையான மாணவர்களுக்கு அவர்கள் விரும்பும் ஒரு கதையை காணொலியாக பதிவுசெய்து அனுப்ப முடியும். காணொலிகளை 0779764300 எனும் வட்ஸ் அப் அல்லது எனும் child.sirakukal@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கமுடியும்.

கதை எழுதுதல் போட்டி தரம் 7 – 9 வரையான மாணவர்களுக்கான போட்டியாக அமைகின்றது. 200 – 350 சொற்கள் கொண்ட கதையாக மாணவர்களின் கற்பனை ஆற்றலை வெளிப்படுத்தும் வகையில் அமை தல் வேண்டும். கதைகளை எனும் child.sirakukal@gmail.com மின்னஞ்சல் அல்லது சிறகுகள் அமையம், 438/ 1 மத்திய வீதி பாரதிபுரம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு தபாலில் அனுப்பமுடியும்.

அனைத்து போட்டிகளுக்குமான இறுதி திகதி 2021.07.10 ஆகும். மேலும் பங்குகொள்பவர்களுக்கான சான்றிதழ் வழங்கப்படுவதுடன் வெற்றியாளர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படும்.

# தமிழர் தாயகப் பகுதிகளிலிருந்து சீனா உடன் வெளியேற வேண்டும்

## காணாமற்போனோர் உறவுகள் கோரிக்கை

தமிழர் தாயகப் பகுதியில் இருந்து சீனா உடனடியாக வெளியேற வேண்டும் என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்தியுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் மேற்கொள்ளப்படும் கவனவீர்ப்பு போராட்டம் 1,600 ஆவது நாளை, நேற்று (திங்கட்கிழமை) எட்டியுள்ளது.

இந்நிலையில் அதனை முன்னிட்டு முன்னெடுக்கப்பட்ட கவனவீர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்ட உறவுகள், ‘தமிழர் பகுதியில் இருந்து சீனா உடனடியாக வெளியேற வேண்டும்.

தமிழர்கள் கடந்த 74 வருடங்களாக அரசியல் தீர்வுகளை பெற்றுக்கொள்வதற்காகப் போராடி வருகின்றனர்.

மேலும் கடந்த 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற போரின்போது, ஒரு லட்சத்து 46 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டனர். 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர் .

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் எமது உறவுகளைத் தேடி முன்னெடுத்து வருகின்ற எங்களது போராட்டம் 1,600 ஆவது நாளினை எட்டியுள்ளது.

ஆனால், இன்னும் அதற்கான நீதியை பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதே வேளை ஐ.நா. பாதுகாப்புக் குழுவில், தமிழர்களுக்கான நீதியை சீனா எதிர்ப்பதால், அவர்கள் தமிழர்களின் நண்பர் அல்லர்.

எனவே, எமது பகுதிகளில் இருந்து சீனா உடனடியாக வெளியேற வேண்டும். மேலும் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா போன்ற நாடுகள் இலங்கை தமிழர்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வை பெற்றுக் கொடுக்கும் செயற்பாட்டை தாமதிக்காமல் முன்னெடுக்க வேண்டும். – என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# வைத்தியர் அருளானந்தத்துக்கு ‘ஆத்ம வியூகன்’ பட்டம் வழங்கல்



**சாவகச்சேரி நிருபர்**

தென்மராட்சி மண்ணின் மைந்தன் வைத்தியர் லயன் சி.அருளானந்தத்தின் அமுத விழாவை முன்னிட்டு அவருக்கு கடந்த திங்கட்கிழமை மீசாலை கிழக்கு அருள்மிகு சித்திரவேலாயுதர் ஆலய நிர்வாகத்தினரால் ‘ஆத்ம வியூகன்’ எனும் கௌரவப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

வைத்தியர் அருளானந்தம் ஐந்து தசாப்த காலமாக மருத்துவப் பணி ஆற்றி வருவதுடன் பல சமூக மற்றும் ஆன்மீகப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் வாழ்த்துரையை யா/போக்கட்டி அ.த.க. பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் வழங்கியிருந்தார்.

# அடுத்த நான்கு மாதங்களுக்கு உரப் பற்றாக்குறை இருக்காது

## அமைச்சர் மஹிந்தானந்த தெரிவிப்பு


அடுத்த 4 மாதங்களுக்கு எந்தவொரு உரப் பற்றாக்குறையும் நாட்டில் இருக்காது என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே உறுதியளித்தார்.

இன்று (செவ்வாய்க்கிழமை) நாடாளுமன்றத்தில் கருத்து தெரிவித்த அவர் –

சேமித்து வைக்கப்பட்டுள்ள அனைத்து உரப் பங்குகளையும் உடனடியாக விடுவிக்க சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு உத்தரவு பிறப்பித்ததாகவும் கூறினார்.

தற்போது 102,000 மெ.தொன் உரங்கள் கையிருப்பில்உள்ளனஎனவும்எவ்வாறாயினும், உரப் பற்றாக்குறை இருப்பதாகக் கூறி, பங்குகளை விவசாயிகளுக்கு விடுவிக்க அரசாங்கம் பிறப்பித்த உத்தரவுகளை நிறுவனங்கள் புறக்கணித்தன எனவும் அவர் தெரிவித்தார்.

இருப்பினும் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற நீண்ட கலந்துரையாடலின் பின்னர் ஒரு வாரத்திற்குள் விவசாயிகளுக்கு உரங்களை வழங்க, நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கூறினார்.



இதேவேளை உர நெருக்கடி தொடர்பாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களுக்கு பின்னால் அரசியல் இருப்பதாகவும் இந்த விவகாரத்தை அரசியல் மயமாக்குவதைத் தவிர்க்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு





# தொடர்கிறது சோகம்

# நைஜீரியாவில் துப்பாக்கி முனையில் 150 பள்ளிக் குழந்தைகள் கடத்தல்

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் துப்பாக்கி முனையில் 150 பள்ளிக் குழந்தைகள் கடத்தப்பட்டுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடுனா பகுதியிலுள்ள Bethel Baptist என்ற பள்ளிக்குள் ஆயுதங்களுடன் புகுந்த மர்மக் கும்பல், பள்ளிக் குழந்தைகளை கடத்திச் சென்றது. கடத்தப்பட்டவர்களில் ஒரு பெண் ஆசிரியர் உட்பட 26 பேர் மட்டும் மீட்கப்பட்டுள்ளனர்.

# அமேசான் நிறுவனத்தின் C.E.O புதிய நியமனம்



அமேசான் நிறுவனத்தின் C.E.O பொறுப்பில் இருந்து ஜெஃப் பெசோஸ் பதவி விலகியமையை தொடர்ந்து புதிய C.E.Oவாக ஆண்டி ஜாஸே நியமிக்கப்பட்டுள்ளார்.

1994 ஆம் ஆண்டு அமேசான் நிறுவனத்தை தொடங்கிய ஜெஃப் பெசோஸ் அதனை உலகின் முன்னனி ஒன்லைன் வர்த்தக நிறுவனமாக மாற்றினார். 1.7 டிரில்லியன் டொலர் மதிப்பிலான அமேசான் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக 27 ஆண்டுகள் பதவி வகித்த ஜெஃப் பெசோஸ் ஜூலை ஐந்தாம் திகதி முதல் பதவி விலகுகிறேன் என அண்மையில் அறிவித்திருந்தார். அந்தப் பதவிக்கு அமேசானின் இணையவழிச் சேவைகளுக்கு பொறுப்பாளராக இருந்த ஆண்டி ஜாஸே-வை ஜெஃப் பெசோஸ் நியமித்துள்ளார். 57 வயதாகும் ஜெஃப் பெசோஸ் இனி தனது செயற்கைக் கோள் தயாரிக்கும் நிறுவனமான ப்ளூ ஒரிஜனில் கவனம் செலுத்த உள்ளார்.



# நேபாள நாடாளுமன்றத்திற்கு நவம்பர் 12 ஆம் திகதி தேர்தல்

## தேர்தல் ஆணையம் அறிவிப்பு

நேபாள நாடாளுமன்றத்திற்கு வருகிற நவம்பர் மாதம் 12 அந் திகதி தேர்தல் நடத்தப்படும் என அந்நாட்டின் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக மேலும் கூறுகையில், நேபாள நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபைக்கு வருகிற நவம்பர் 12 மற்றும் 19ஆம் திகதிகளில் இருகட்டமாகத் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேபாள அரசியலமைப்பு சட்டப்படி, 275 உறுப்பினர்கள் கொண்ட பிரதிநிதிகள் சபைக்கு 165 உறுப்பினர்கள் தேர்தல் மூலமும், 110 உறுப்பினர்கள் விகிதாசார முறையிலும் தேர்ந்தெடுக்கப்படுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# எலிகளிடம் வெற்றிகரமாக பரிசோதனை; கொரோனா சிகிச்சை முறை கண்டுபிடிப்பு

உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸுக்கு எதிராக பல தடுப்பூசிகள் வெற்றிகரமாக கண்டறியப்பட்டு உள்ளன. இதன் தொடர்ச்சியாக இந்தத் தொற்றுக்கான சிகிச்சை முறை ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டறிந்து உள்ளனர்.

குறிப்பாக தொற்றுக்கு எதிராக புரோட்டீஸ் என்சைம் தடுப்பான் (ஜிசி376) மூலம் சிகிச்சை அளித்தால் சிறந்த முன்னேற்றம் காணப்படுவதாக அமெரிக்காவின் கன்சாஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

இந்த ஆய்வு முடிவுகள் தேசிய அறிவியல் அக்கடமி நடவடிக்கைகள் மருத்துவ பத்திரிகையில் வெளியிடப்பட்டு உள்ளன.

அந்தவகையில் கொரோனா பாதித்த எலிகள் உள்ளிட்ட விலங்குகளுக்கு புரோட்டீஸ் என்சைம் தடுப்பான் கொண்டு சிகிச்சை அளித்தபோது அதன் இறப்புகள் குறைவதுடன், நுரையீரல் தொற்று குறைவதும் கண்டறியப்பட்டு உள்ளது.

வைரஸ் தடுப்பு மருந்துகளின் ஒரு வகையான இந்த புரோட்டீஸ் தடுப்பான்களால், வைரஸ்களின் இனப்பெருக்கம் தடுப்பதுடன், வைரஸ் உற்பத்திக்கு தேவையான புரதங்களை செயல்படுத்துவதையும தடுக்கப்படுகிறது. இது குறித்து கன்சாஸ் பல்கலைக்கழக இணை பேராசிரியரான யுன்ஜியோங் கிம் கூறுகையில், 'பூனைகளுக்கு கொரோனா சிகிச்சைக்காக நாங்கள் இந்த புரோட்டீஸ் தடுப்பான்களை ஜிசி376 நாங்கள் உருவாக்கினோம். தற்போது அது விலங்குகளுக்கான மருந்தாக வர்த்தக ரீதியான தயாரிப்பில் உள்ளது' என்று தெரிவித்தார்.

கொரோனாத் தொற்று பரவத் தொடங்கிய பிறகு, இந்த வைரஸுக்கு எதிராக இந்த தடுப்பானும் பயனுள்ளதாக இருப்பதாக பல ஆராய்ச்சிக் குழுக்கள் தெரிவித்ததாக கூறிய கிம், தற்போது பலரும் இதை ஒரு சிகிச்சையாக தொடர்கின்றனர் எனவும் தெரிவித்தார்.

இந்த புரோட்டீஸ் என்சைம் தடுப்பான் ஜிசி376-ஐ டியூட்டிரேசன் மூலம் மாற்றியமைக்கும்போது, அது கொரோனா வைரஸுக்கு எதிராக சிறப்பாக செயல்படுவதாக இந்த ஆய்வாளர்கள் தெரிவித்து உள்ளனர்.

தொற்று பாதித்த எலிக்கு 24 மணி நேரத்துக்கு பின் இந்த சிகிச்சையை மேற்கொள்ளும்போது, சிகிச்சை பெறாத எலிகளை விட சிகிச்சை பெற்ற எலிகளிடம் இறப்பு விகிதம் மிகவும் குறைவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். கொரோனாவுக்கு எதிராக பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி மேம் பட்ட தடுப்பான்களை வைரஸ் சிகிச்சை நிபுணர்கள் உருவாக்கி வருகின்றனர். இதில் மேற்படி சிகிச்சை முறை மேலும் சாத்தியமான மேம்பாட்டுக்காக மதிப்பீடு செய் யப்படுகிறது. எலிகளிடம் இந்த சிகிச்சை முறை வெற்றி பெற்றிருப்பதன் மூலம் இது கொரோனா சிகிச்சை முறையில் முக்கிய திருப்பு முனையாக கருதப்படுகிறது.





## மண்ணிற்கு பதிலாக நீரில் செய்யப்படும்

# ஹைட்ரோபோனிக் முறை விவசாயம்

எகிப்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், மண்ணிற்கு மாற்றாக ஊட்டச்சத்துகள் கலந்த நீரில் செய்யப்படும் ஹைட்ரோபோனிக் விவசாயம் மூலம் குறைந்தளவு நீரை பயன்படுத்தி அதிக மகசூலை ஈட்டியுள்ளார்.

32 வயதாகும் அப்டெல்ரஹ்மான் (Abdelrahman) தனக்குச் சொந்தமான ஒரு ஏக்கர் நிலத்தில் ஹைட்ரோபோனிக் விவசாயம் மற்றும் ஜிலேபி மீன் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளார். தண்ணீரில் வளரும் காய்கறிச் செடிகளுக்கு உரமாக மீன் தொட்டிகளில் சேரும் கழிவுகள் பயன்படுத்தப்படுகிறது.

வழக்கமாக அதிகளவு நீரைப் பயன்படுத்தி, 8 ஏக்கர் நிலத்தில் கிடைக்கும் மகசூல் ஹைட்ரோபோனிக் விவசாயம் மூலம் ஒரு ஏக்கரில் கிடைப்பதாகத் தெரிவிக்கும் அப்டெல்ரஹ்மான் இதன் மூலம் 95 சதவீத நீர் தேவை மிச்சப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

# 2021 இறுதிக்குள் ஒட்டுமொத்த இந்தியர்களுக்கும் தடுப்பூசி

## சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷ்வர்தன் நம்பிக்கை



கோவின் என்ற இந்திய சுகாதாரத் துறையின் இணையத்தளத்தின் பயன்பாடு பற்றி இந்தியாவின் சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷ்வர்தன் உரையாற்றினார். அப்போது அவர்,

கோவின் இணையத்தளம் இந்தியாவின் டிஜிட்டல் முன்னெடுப்பின் மணிமகுடம். இது இந்தியாவில் தடுப்பூசித் திட்டத்தின் முதுகெலும்பாக இருந்திருக்கிறது. தடுப்பூசி செலுத்திக் கொள்ள விரும்புவோருக்கு உதவுவதோடு அதனை வெளிப்படைத்தன்மையுடன் செயல்படுத்த கோவின் இணையத்தளம் உதவியிருக்கிறது.

தடுப்பூசி செலுத்திக்கொள்ளும் பொதுமக்களின் பதிவு, சான்றிதழ் என அனைத்தையும் திறம்பட ஒருங்கிணைக்க கோவின் இணையத்தளம் கை கொடுத்துள்ளது. இந்த இணையத்தளத்தில் இந்தியாவின் மூலை முடுக்கிலிருந்தெல்லாம் மக்கள் பதிவு செய்தனர். இதனால் தடுப்பூசியின் தேவையை மிகவும் நுட்பமாக அறிந்துகொள்ள முடிந்தது.

இந்தியா தடுப்பூசி திட்டத்தை செயல்படுத்தத் தொடங்கி 6 மாதங்களே ஆகியுள்ள நிலையில், இதுவரை 35 கோடிப் பேருக்கும் அதிகமானோருக்குக் கொரோனாத் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டிருக்கின்றன. டிசெம்பர் 2021இற்குள் தடுப்பூசி பெறத் தகுதியுடைய ஒட்டுமொத்த மக்களுக்கும் தடுப்பூசியைச் செலுத்தியிருப்போம் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார்.



# இந்தியாவில் முஸ்லிம்கள் வாழக்கூடாது எனக்கூறுபவன் இந்துவே அல்லன்

## ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத்

இந்தியாவில் முஸ்லிம்கள் வாழக்கூடாது எனக்கூறுபவன் இந்துவே அல்ல என ஆர்.எஸ்.எஸ் .தலைவர்களில் ஒருவரான மோகன் பக்வத் தெரிவித்திருக்கிறார்.

உத்தரப்பிரதேச மாநிலம் காசியாபாத்தில் ஆர்.எஸ்.எஸ்ஸின் முஸ்லிம் பிரிவான முஸ்லிம் ராஷ்டிரிய மஞ்ச் ஏற்பாடு செய்திருந்த புத்தக வெளியீட்டு விழாவில் மோகன் பக்வத் கலந்துகொண்டு உரையாற்றினார். அப்போது அவர், நாம் ஜனநாயக நாட்டில் வாழ்கிறோம். இங்கு இந்துக்கள் மற்றும் இஸ்லாமியர்களின் ஆதிக்கம் ஒருபோதும் இருக்க முடியாது. இந்தியாவில் இந்தியர்களின் ஆதிக்கம் மட்டுமே இருக்க முடியும். தேசியவாதம் என்பது ஒற்றுமையின் அடிப்படையில் இருக்கவேண்டும்.

ஓர் இந்து, 'இந்த நாட்டில் முஸ்லிம்கள் வாழக்கூடாது!' எனக் கூறினால் அந்த நபர் இந்துவே அல்ல. பசு புனிதமான விலங்கு என்றாலும் அதற்காகக் கும்பலாக தாக்குதலில் ஈடுபடும் இந்துக்கள் இந்துத்துவா கொள்கைக்கு எதிரானவர்கள். அவர்கள் மீது எந்தப் பாகுபாடும் காட்டாமல் சட்டம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்திய மக்களுக்கு ஒரே டி.என்.ஏ. தான் உள்ளது. இந்து–முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமை வேண்டும் எனப் பேசுபவர்களுக்கு ஒன்றைச் சொல்கிறோம். இங்கு நாங்கள் ஒற்றுமையாகத்தான் இருக்கிறோம். நாங்கள் இங்கு பிரிந்து இருக்கவில்லை. ஆர்.எஸ்.எஸ்.க்கு கட்சி அரசியலில் விருப்பம் இல்லை. நாடுதான் எங்களுக்கு முக்கியம். நாட்டுக்காக பேசுபவர்களுக்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்று தெரிவித்திருக்கிறார்.

# இந்திய உள்நாட்டு விமானங்களில் 65 வீதமான பயணிகளுக்கு அனுமதி

உள்நாட்டு விமானங்களில் 65 சதவிகிதம் வரை பயணிகளை ஏற்றிச் செல்ல விமான இந்தியப் போக்குவரத்து அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.

ஏற்கனவே 50 சதவீதப் பயணிகள் மட்டும் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது 65 வீதமானோர் பயணிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பல்வேறு மாநிலங்களில் வேகமாகத் தடுப்பூசி செலுத்தப்படுவதால், கொரோனாவின் இரண்டாவது அலை குறைந்து வருகிறது. இதனால், மாநில அரசுகள் பல்வேறு தளர்வுகளை அறிவித்து வருகின்றன. அந்த வகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உள்நாட்டு விமானச் சேவைகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# மனைவியைப் பிரிய கொரோனாவைப் பயன்படுத்திய இளைஞர் மோசடிக் குற்றச்சாட்டில் சிக்கியுள்ளார்



இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தின் இந்தூரைச் சேர்ந்த 26 வயது இளைஞர் ஒருவருக்கு கடந்த பெப்ரவரி மாதம்தான் திருமணம் நடைபெற்றிருக்கிறது. திருமணமாகி சில மாதங்களே ஆகியிருக்கும் நிலையில் அவர் மனைவியுடன் ஒன்றாக வசிப்பதிலிருந்து ஏதோ காரணத்திற்காக தப்பிக்க முயற்சித்திருக்கிறார். அப்போது அவரது மனதில் தோன்றியதுதான் 'கொரோனா பொசிட்டிவ்' திட்டம்.

தனியார் கொரோனா பரிசோதனை மையத்திலிருந்து கொரோனா பொசிட்டிவ் ரிப்போர்ட் ஒன்றை இணையம் மூலம் பதிவிறக்கம் செய்த அந்த 26 வயது இளைஞர், வேறு ஒருவரின் பெயருக்குப் பதிலாக தன்னுடைய பெயரை மாற்றி இடம்பெறச் செய்து அந்த ரிப்போர்ட்டினை தன்னுடைய மனைவிக்கும், தனது தந்தைக்கும் வட்ஸ் அப் மூலம் அனுப்பிவைத்துவிட்டு எங்கேயோ திடீரென மாயமாகியுள்ளார். இருப்பினும் அவருக்கு அறிகுறிகள் ஏதும் இல்லாததாலும், மகனின் நடவடிக்கைகளின் மீது சந்தேகம் எழுந்தமையாலும் குறிப்பிட்ட தனியார் பரிசோதனை மையத்திற்கு நேரில் சென்று அந்த இளைஞரின் தந்தையும் இது குறித்து விசாரித்திருக்கின்றார். அது போலியான சான்றிதழ் என்பதை அறிந்துகொண்டிருக்கிறார்.

அதே நேரத்தில் தனியார் பரிசோதனை மையத்தினர், 26 வயது இளைஞரின் மோசடி குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்திருக்கின்றனர். இது தொடர்பாக நேரில் ஆஜராகுமாறு இளைஞருக்கு பொலிஸார் நோட்டீஸ் அனுப்பியுள்ளனர். மனைவியுடன் வாழப்பிடிக்காமல் அவரிடம் இருந்து ஒதுங்க நினைத்த இளைஞர் தற்போது சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளார்.

# இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சிரிஷா விண்வெளிப் பயணத்தை மேற்கொள்கிறார்

வேர்ஜின் கலக்டிக் என்ற அமெரிக்க தனியார் விண்வெளி நிறுவனம் தனது சோதனை முயற்சியின் ஒரு பகுதியாக அடுத்த வார இறுதியில் தனது விண்கலமான 'யூனிட்டி 22' ஐ அறிமுகப்படுத்துகிறது.

இதன் மூலம் நிறுவனத்தின் தலைவரான ரிச்சர்ட் பிரான்சன் உள்ளிட்ட 5 பேர் கொண்ட குழு வரும் 11 ஆம் திகதி விண்வெளிப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளது. பிரான்சனுடன் சிரிஷா பண்ட்லா, பெத் மோசஸ் மற்றும் கொலின் பென்னட் ஆகியோர் விண்வெளிக்குப் பயணம் செய்யவிருக்கின்றனர்.



விண்வெளிப் பயணம் மேற்கொள்ளவுள்ள இரண்டாவது இந்திய வம்சாவளிப் பெண் என்ற பெருமையை ஆந்திராவைப் பூர்வீகமாகக் கொண்ட சிரிஷா பண்டாலா பெற்றுள்ளார். வேர்ஜின் கலக்டிக் நிறுவனத்தில் அரசு விவகாரங்கள் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளின் துணைத் தலைவராக இவர் இருக்கிறார். முப்பத்தொரு வயதான சிரிஷா பண்ட்லா, இந்தியாவில் பிறந்த இரண்டாவது நபராகவும் தெலுங்கு வம்சாவளியைச் சேர்ந்த முதல் நபராகவும் இருப்பார். ஆந்திராவின் தெனாலியில் தனது முன்னோர்களைக் கொண்ட விண் வெளிப் பொறியியளாரான இவர், ராகேஷ் சர்மா, கல்பனா சாவ்லா மற்றும் சுனிதா வில்லியம்ஸ் ஆகியோருக்குப் பின்னர் விண்வெளியில் பறக்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நான்காவது நபராக விளங்கவிருக்கிறார்.

கல்பானா சாவ்லாவைத் தொடர்ந்து விண்வெளிப் பயணம் மேற்கொள்ளவுள்ள தமது மண்ணின் வாரிசான சிரிஷாவுக்கு தெலுங்கு தேசம் கட்சியின் தலைவர் சந்திரபாபு நாயுடு உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர்.

## களுவாஞ்சிகுடி திண்மக்கழிவுகள் முகாமைத்துவ நிலையத்தில்

# சேதன பசளைகள் தயாரிப்பு



மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையினால் களுவாஞ்சிகுடியில் உள்ள திண்மக்கழிவுகள் முகாமைத்துவ நிலையத்தில் சேதன பசளைகள் தயாரிப்பு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. தினமும் 5 தொன் கழிவுகள் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபையினால் சேகரிக் கப்படுவதுடன் அவற்றில் உக்கும் கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு உக்கக்கூடிய கழிவுகளைக் கொண்டு சேதனப்பசளையினை தயாரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறித்த நிலையத்தில் தினமும் உற்பத்தி செய்யப்படும் கழிவுகளை மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இருந்து தோட்ட உற்பத்தியாளர் கள், சேனை பயிர்ச் செய்கையாளர்கள் பெற்றுச் செல்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

நிலையத்திற்கு வருகைதந்த மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் தவிசாளர் ஞா.யோகநாதன் மற்றும் பிரதேசசபை உறுப்பினர் இளங்கோ ஆகியோர் நிலையத்தின் செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளித்தனர்.

ஒரு நாளைக்கு 35 தொன் சேதனப்பசளைகளை உற்பத்தி செய்யக் கூடியவாறு நிலையத்தினை மாற்றும்போது மாவட்டம் முழு வதும் சேதனப்பசளைகளை விநியோகிக்கமுடியும் என மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபை யின் தவிசாளர் ஞா.யோகநாதன் தெரிவித்தார்.

ஜனாதிபதி முன்னெடுத்துவரும் சிறந்த திட்டமான நஞ்சற்ற சேதனப் பசளை உற்பத்திக்கு தேவையான அனைத்து உதவிகளையும் பிரதேச சபை வழங்கும் எனவும் இதனை பயன்படுத்தி நஞ்சற்ற உற்பத்தியை மக்களுக்கு வழங்குவோம் எனவும் அவர் தெரிவித்தார்.



## கல்முனையில்

# கிராம உத்தியோகத்தர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்

காணிப் பிணக்கு தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்குச் சென்ற கல்முனை பிரதேச செயலக உப செயலகத்தின் கிராமஅலுவலர் ஒருவரை கல்முனையைச் சேர்ந்த ஒருவர் தாக்கியதாக குற்றம்சாட்டி சுலோகங்களை ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று பகல் கல்முனை பிரதேச செயலக உப செயலகத்தின் முன்னால் கிராம அலுவலர்களினால் முன்னெடுக்கப்பட்டது.

தாக்கப்பட்டதாக கூறப்படும் கல்முனை 01சீ கிராமஅலுவலர் சந்திரகுமார் தம்பிராசா ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது, நீர் வடிச்சல் உள்ள காணிக்கு பக்கத்தில் உள்ள காணியை உரிமையாளர் தன்னுடைய காணியை நிரப்பும் போது நீர் வடிச்சலையும் நிரம்பியதாகவும் அப்போது வீதியால் சென்ற அவர் அதை தட்டிக் கேட்டபோது தன்னை அந்த காணிக்குரியவர் தாக்கினார் எனவும் தெரிவித்தார்.

அது மாத்திரமின்றி இப்படியானவர்களுக்கு அரசாங்கம் முறையாக காணிப்பத்திரம் வழங்கியுள்ளதாகவும் குற்றம் சுமத்தினார். மேலும் இதுதொட்பில் கல்முனை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட கிராம அலுவலர்களினால் மகஜர் ஒன்றும் உதவி பிரதேச செயலாளர் அதிசயராஜிடம் கையளிக்கப்பட்டது.

கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலியை ஊடகவியலாளர்கள் தொடர்பு கொண்டு கேட்டபோது ஆர்ப்பாட்டம் தொடர்பில் தனக்கு எவ்வித விடயங்களும் தெரியாது என்றும், தாக்கினார் என குற்றம் சாட்டப்பட்ட நபரை கல்முனை பொலிஸார் அன்றையதினமே கைதுசெய்துள்ளனர் எனவும், அதன் பின்னர் அந்த நபர் பிணையில் விடுதலையாகியுள்ளதாக தான் அறிவித்தோம் எனவும் தெரிவித்தார். மேலும் இன்றைய போராட்டம் தொடர்பில் தனக்கு எவ்வித அறிவித்தல்களும் உத்தியோ கபூர்வமாக கிடைக்கவில்லை என்றும் சில நேரங்களில் உதவி பிரதேச செயலாளருக்கு அறிவித்திருக்கக் கூடும் என்றும் தெரிவித்தார்.

தனக்கும் உதவி பிரதேச செயலாளருக்கும் பல வருடங்களாக புரிந்துணர்வு இருந்தும் தன்னுடைய அறிவுறுத்தல்கள் முதல் கல்முனை பிரதேச செயலாளராக இருந்த யாருடைய அறிவித்தல்களையும் தற்போதைய உதவி பிரதேச செயலாளர் பின்பற்றுவதில்லை என்றும் இவ்விடயம் தொடர்பில் அம்பாறை அரசாங்க அதிபருக்கு பிரதிகளை அனுப்பியுள்ளோம் எனவும் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும் போது தெரிவித்தார்.

# கிழக்கு மாகாணத்துக்கு ஒட்சிசன் சிலிண்டர்கள்



கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலுள்ள 20 கொவிட் வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப் படுத்தல் நிலையங்களில் கொவிட் தொற்றிற்குள்ளானவர்களின் நலன் கருதி அமெரிக்க யூத உலக சேவை நிறுவனத்தின் நிதி அனுசரணையுடனும் கிழக்கு மாகாண பங்காளர் அமைப்புக்களின் உதவிகளுடனும் 77லட்சம் பெறுமதி கொண்ட 100 ஒட்சிசனுடன் கூடிய சிலிண்டர்களையும், 100 ஒட்சிசன் றெகுலேற்றர்களையும் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

அதனடிப்படையில் 30 ஒட்சிசன் சிலிண்டர்களையும் 25 ரெகுலேட்டர்களையும் நேற்று திரு கோணமலை மாவட்ட செயலகத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் வைத்து திருகோணமலை மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது

உலகையே ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் கொவிட்டின் 3வது அலைத் தாக்கமானது குறிப்பாக இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் வழமைக்கு மாறாக பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது இந்நிலையில் கொவிட் தொற்றாளர்களுக்காக சிகிச்சையளிக்கும் வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் நிலையங்களிற்கு இவ் ஒட்சிசன் தேவையுள்ளதனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஊடாக விடுக்கப்பட்ட வேண்டுகோளிற்கிணங்க அகம் மனிதாபிமான வள நிலைய நிறுவனம் மற்றும் திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பு இணைந்து 30 ஒட்சிசன் சிலின்டர்களையும் 25 ரெகுலேட்டஸ்களையும் வழங்கிவைத்தது.

# வயோதிபரான மீனவர் ஒருவர் குளத்திலிருந்து சடலமாக மீட்பு

மட்டக்களப்பு பதுளை வீதியை அண்டியுள்ள புத்தம்புரி குளத்திலிருந்து வயோதிபரான மீனவர் ஒருவரின் சடலத்தை மீட்டுள்ளோம் என கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று திங்கட்கிழமை மீட்கப்பட்ட இந்தச் சடலம் நெல்லிப்போடியாகல் கிராமத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி நடராசா (வயது 75) என்பவருடையது என உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர். வழமைபோன்று இவர் தனது வீட்டிலிருந்து மீன்பிடிப்பதற்காக ஞாயிற்றுக்கிழமை மாலை புத்தம்புரி குளத்திற்குச் சென்றுள்ளார்.

திங்கட்கிழமை அதிகாலை ஏனைய மீனவர்களும் வழமை போன்று புத்தம்புரிக் குளத்தில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது தோணியொன்று குளத்தில் மிதப்பதையும் அதனருகே ஒருவர் வலையில் சிக்கிய நிலையில் நீரில் மூழ்கி உயிரிழந்து கிடக்கின்றமையும் அவதானித்துள்ளனர். மரணித்திருப்பவரை அடையாளம் கண்டு கொண்ட ஏனைய மீனவர்கள் தகவலை உறவினர்களுக்கும் பொலிஸாருக்கும் அறிவித்ததன் பேரில் சடலம் மீட்கப்பட்டது. இவருக்கு வலிப்பு நோய் ஏற்படுவதாக உறவினர்கள் விசாரணையில் தெரிவித்துள்ளனர். சடலம் உடற் கூறாய்வுப் பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக கரடியனாறு பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.



# பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு உலர் உணவு

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் செம்மண்ணோடை கிராமத்தில் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பொருளாதார ரீதியாக நலிவுற்ற பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தினால் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

செம்மண்ணோடை கிராம அதிகாரி எம்.சாதாத் தலைமையில் உலர் உணவு வழங்கும் நிகழ்வில் கிழக்கு சமூக அபிவிருத்தி மையத் தின் பணிப்பாளர் எம்.எல்.எம்.புஹாரி, அபிவிருத்தி மையத்தின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பில் இன்று காலை தொடக்கம் கொவிட் தடுப்பூசிகள் செலுத்த நடவடிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று காலை தொடக்கம் கொவிட் தடுப்பூசி செலுத்தப்படுகின்றமையால் 60 வயதுக்கு மேற்பட்ட அனைவரையும் கொவிட் தடுப்பூசி பெற்றுக் கொள்ளுமாறு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் கோரியுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் காலை 8 மணி தொடக்கம் அனைத்து சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவிலும் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் அனைத்து 60 வயதுக்கும் மேற்பட்டவர்களும் தங்களது தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பிரதேச செயலகப்பிரிவுகளிலும் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தினை தொடர்புகொண்டு தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# ஒலிம்பிக் போட்டிகளை ரத்துச் செய்யுமாறு ஜப்பானிய மருத்துவர்களும் கோரிக்கை!

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இம்மாதம் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் 15,000 தடகள வீரர்கள், சுமார் 50,000 அதிகாரிகள், 70,000 உதவிப் பணியாளர்கள் ஒன்று கூடுகின்றனர்.

இந்த நிலையில் பொதுக்கருத்துக் கணிப்பில் 60% ஜப்பானிய மக்கள் ஒலிம்பிக் போட்டிகளை நடத்தக் கூடாது, என்றும் சிலர் தள்ளி வைக்க வேண்டும் என்றும் கூறியுள்ளனர். டோக்கியோ நகரில் 10% மக்களுக்கே இதுவரையில் கொரோனாத் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில் ஒரு இடத்தில் வெளிநாட்டவரும், உள்நாட்டவரும் கூடுவது என்பது பெரிய ஆபத்து என்றும் கொரோனாப் பரவல் இன்னமும் குறையவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும் என்றும் மக்கள் கருத்துக் கணிப்பில் கூறியுள்ளனர்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோ அசெம்ப்ளியின் 127 இடங்களுக்கான தேர்தலில் இந்த ஒலிம்பிக் போட்டிகள் குறித்த விளைவும் கொரோனா அச்சமும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்த ஆளுநர் யுரிகோ கொய்கேவின் கட்சி 46 இடங்களிலிருந்து சரிந்து 31 இடங்களையே கைப்பற்றியுள்ளது. தேசத்தை ஆளும் சுதந்திர ஜனநாயகக் கட்சி 25 இடங்களிலிருந்து முன்னேறி 33 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. ஒலிம்பிக் போட்டிகளை நடத்தக் கூடாது என்று தொடர்ந்து குரல் கொடுத்து வரும் கம்யூனிஸ்ட் கட்சி 19 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவது பற்றி கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி 8 இடங்களிலிருந்து 15 இடங்களுக்கு முன்னேறியுள்ளது.

டோக்கியோ ஆளுநர், பார்வையாளர்கள் இல்லாமல் போட்டிகளை நடத்தலாம் என்று தனது கருத்தினை வெளியிட்டிருக்கிறார்.

டோக்கியோ நகரில் 1.4 கோடி மக்கள் வாழ்கின்ற நிலையில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்தினால் அது கொரோனாவை அதி தீவிரமாகப் பரப்பிவிடும் என்று மருத்துவ நிபுணர்களும் எச்சரித்துள்ளனர். இப்போது தினசரி நூற்றுக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இது ஆயிரக்கணக்குக்கு எகிறும் என்று அவர்கள் எச்சரித்துள்ளனர்.

## 79 பந்துகளில் 205 ஓட்டங்கள் குவிப்பு

# ரி-20 போட்டியில் முதல் இரட்டைச் சதமடித்த டெல்லி வீரர்

டெல்லியைச் சேர்ந்த கிரிக்கெட் வீரரான சுபோத் பாட்டி, உள்ளூரில் நடைபெற்ற ரி-20 போட்டியொன்றில் 79 பந்துகளில் 205 ஓட்டங்களைக் குவித்து சாதனை படைத்துள்ளார்.

டெல்லி லெவன் அணிக்கும் சிம்பா அணிக்கும் இடையே நடைபெற்ற கழக மட்ட ரி-20 போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி லெவன் அணி 20 ஓவர் முடிவில் 256 ஓட்டங்களை எடுத்தது. இதில் சுபோத் பாட்டி 79 பந்துகளில் 17 சிக்ஸர்களும், 17 பவுண்டரிகளும் அடங்கலாக 205 ஓட்டங்களை எடுத்தார். இதன் மூலம் ரி-20 போட்டிகளில் முதன் முதலாக இரட்டைச் சதம் அடித்த வீரர் என்ற பெருமையை அவர் பெற்றிருக்கிறார்.

30 வயதாகும் சுபோத் பாட்டி, வலது கை வேகப்பந்து வீச்சாளர். ஆனால், துடுப்பாட்டத்திலும் தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டு வருகிறார். டெல்லி அணிக்காக 2015 ஆம் ஆண்டு அறிமுகமான சுபோத் பாட்டி அந்த அணிக்காக ரஞ்சி, சையத் முஷ்டக் அலி கிண்ணம், விஜய் ஹசாரே கிண்ணம் போன்ற தொடர்களில் விளையாடி வருகிறார்.




ரி-20 போட்டிகளில் மேற்கிந்தியத் தீவுகளின் கிறிஸ் கெயில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்காக அதிகபட்சமாக 66 பந்துகளில் 175 ஓட்டங்களைப் பெற்றிருக்கிறார். இவருக்கு அடுத்தபடியாக ஆஸ்திரேலிய வீரர் ஆரோன் ஃபின்ச் சிம்பாப்வேக்குஎதிராக 76 பந்துகளில் 172 ஓட்டங்களையும், சிம்பாப்வேயின் முன்னாள் வீரர் மசகட்சா, உள்நாட்டுக் கழகப் போட்டியொன்றில் 71 பந்துகளில் 162 ஓட்டங்களையும், ஆப்கானிஸ்தானின் ஸஸாய், அயர்லாந்துக்கு எதிராக 162 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். இப்போது இவர்களது ஒட்டுமொத்த சாதனைகளையும் டெல்லி வீரர் சுபோத், தகர்த்து சாதனை படைத்திருக்கிறார்.

ECB PCB

# இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்கள் மூவருக்கு கொரோனாத் தொற்று

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து தலா 3 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் மற்றும் ரி-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், இங்கிலாந்து அணியினருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 3 வீரர்களுக்கும் அணி நிர்வாக உறுப்பினர்கள் 4 பேருக்கும் தொற்றுப் பாதிப்பு ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதையடுத்து, அவர்களையும் அவர்களோடு தொடர்பில் இருந்தவர்களையும் தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் ஆயினும், பாகிஸ்தானுக்கு எதிரான போட்டித்தொடர் நிச்சயம் திட்டமிட்டபடி நடைபெறும் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

## கோபா அமெரிக்கா கால்பந்தாட்டத் தொடர்

# அரையிறுதியில் பெருவை வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்தது பிரேஸில்

கோபா அமெரிக்கா 2021 தென்னமெரிக்கக் கால்பந்தாட்டத் தொடரின் முதல் அரையிறுதியில் பெரு அணியை பிரேஸில் அணி 1-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

இடைவேளைக்கு சற்று முன்னதாக லூகாச் பக்கெட்டா அடித்த கோல், பிரேஸில் அணியை இறுதிப் போட்டிக்கு அழைத்துச் சென்றது. பெருவின் மூன்று தடுப்பு வீரர்களை ஏய்த்து, நெய்மர் அழகாகப் பாஸ் செய்த பந்தை லூகாச் பக்கெட்டா கோலாக மாற்றினார்.

கோபா அமெரிக்கா போட்டித் தொடரில் உள்நாட்டில் தோற்கடிக்கப்படாத பிரேஸில் அணி, இந்த வருடத் தொடரில் ஒரு போட்டி தவிர



அனைத்தையும் வென்று இறுதியிலும் வெல்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக்கொண்டுள்ளது. 12 போட்டிகளில் தோற்காமல் ஆடிவரும் பிரேஸில் அணி, ஈக்வடார் அணிக்கு எதிராக 1-1 என்று பிரேஸில் சமநிலையில் முடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிண்ணத்தைக் கைப்பற்றினால் பிரேஸில் 10 ஆவது முறையாக சம்பியன் என்ற சாதனையை நிகழ்த்தும். 2 ஆண்டுகளுக்கு முன்பாக கோபா அமெரிக்க தொடரின் இறுதிப்போட்டியில் காயமடைந்த நெய்மார் இல்லாமலேயே பெருவை 3- 1 என்று வீழ்த்தி பிரேஸில் சம்பியன் ஆகியிருந்தது.

மற்றொரு அரையிறுதியில் ஆர்ஜெண்டினா-கொலம்பியா அணிகள் நாளை மோதவுள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பெருந்தோட்டத் தொழிலாளர் சம்பள விவகாரம்; சர்வதேச தொழில் அமைப்புக்கு அவசர கடிதம்

## அனுப்பினார் இராதாகிருஷ்ணன்

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கியுள்ள சம்பள விவகாரம் மற்றும் தொழில் பாதுகாப்பு ஆகிய விடயங்களில் தலையிடுமாறு வலியுறுத்தி சர்வதேச தொழில் அமைப்பிற்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளேன் என மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் வே.இராதாகிருஷ்ணன் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபா சம்பளத்தை பெற்றுக்கொடுத்துள்ளதாக மார்தட்டிய குழு தற்போது காணாமற்போயுள்ளது.

மேலும் 1,000 ரூபா சம்பள விவகாரத்துக்கு பின்னர் தொழிலாளர்கள் நிர்வாகத்தினரால் நசுக்கப்படுகின்றனர். தொழில் சுமைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் வேலை நாள்கள் குறைக்கப்பட்டுள்ளன.

இதனால் தற்போது பெரும்பாலான பகுதிகளில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் போராட்டங்களில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.

ஆகவே பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்வித நிபந்தனைகளும் இன்றி, இதற்கு முன்னர் செய்த வேலையின் அளவுக்கே நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா கிடைப்பதை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

மேலும் தொழில்சார் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு அவசியம் உள்ளிட்ட சில முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து தொழில் ஆணையாளருக்கு நாம் கடிதமொன்றை எழுதினோம்.

இதேவேளை தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க ஒத்துழைப்பு வழங்குமாறு கம்பனிகளிடமும் கோரினோம். ஆனால் இரு தரப்பினருமே எமது கோரிக்கைகளைச் செவிமடுக்கவில்லை.

அரசாங்கமும் தொழிலாளர்களின் குறித்த பிரச்சினைக்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்பது தெரியவில்லை. ஆகவேதான் இந்த விடயத்தில் தலையீடுகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி சர்வதேச தொழில் அமைப்புக்கு தமிழ் முற்போக்கு கூட்டணி கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது. - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஸ்ரீலங்கன் விமானசேவை ஊழியர்கள் கோப் குழுவில் முன்னிலையாகினர்

பொது முயற்சியாண்மைக்கான நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் (கோப்) இன்று (செவ்வாய்க்கிழமை) முன்னிலையாகுமாறு ஸ்ரீலங்கன் விமான சேவை ஊழியர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதன்படி அவர்கள் நேற்று முன்னிலையாகினர்.

ஸ்ரீலங்கன் விமான சேவையின் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பான விசாரணைகளுக்காக இந்த அழைப்பு விடுக்கப்பட்டது. இதேவேளை, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களை நேற்று (புதன்கிழமை) கோப் குழுவில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஆபாச வலைத்தளங்களை தடைசெய்ய நீதிமன்று அறிவிப்பு

தற்போது பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும் பின்னணியில் மாணவர்களுக்கு இணைய வழியில் கல்வி நடத்தப்படுவதால் சிறுவர்கள் எளிதில் ஆபாச வலைத்தளங்களை அணுகக்கூடும் என கொழும்பு மேலதிக நீதிவான் லோச்சனி அபேவிக்ரம நேற்று திங்கட்கிழமை நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

சிறுமி ஒருவரை இணையத்தில் பாலியல் விற்பனைக்கு விடுத்த வழக்கில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது நீதிவான் இதை சுட்டிக்காட்டியிருந்தார்.

விசாரணைக்கு இடையில், பாடசாலைகள் ஆரம்பிக்கும் வரை சிறுவர்கள் ஆபாச வலைத்தளங்களை அணுகுவதைத் தடுக்க ஏற்பாடுகள் செய்யுமாறு சி.ஐ.டி. மற்றும் மகளிர் மற்றும் குழந்தைகள் பணியகத்திடம் நீதிவான் கோரிக்கை விடுத்தார்.

கைப்பேசிகள் அல்லது கணினிகள் சிறுவர்களின் கைகளுக்குக் கிடைப்பதை தடுக்க முடியாது என்று சுட்டிக்காட்டிய நீதிவான், பெற்றோர்கள் பணிக்காக வீட்டிலிருந்து சென்றிருக்கும் போது குழந்தைகள் இந்தச் சாதனங்களை கல்வி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துகிறார்கள் என்றும் கூறினார்.

இதுபோன்ற சூழ்நிலையில், சிறுவர்கள் எளிதில் ஆபாச வலைத்தளங்களை அணுகலாம் என்றும் நீதிவான் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாகத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்துடன் கலந்துரையாட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சி.ஐ.டி. மற்றும் சிறுவர்கள் பணியகத்தின் அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர்.

# சமூகப் பணியாளர் யோகநாதன் நேற்று யாழ்ப்பாணத்தில் மறைந்தார்



யாழ். சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் நிர்வாக இயக்குநர் சொக்கநாதன் யோகநாதன் நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை யாழ்ப்பாணத்தில் கொவிட் தொற்றால் மறைந்தார். அவரின் மறைவு ஈழத்தமிழ் கல்வியுலகுக்குப் பேரிழப்பாகும்.

இவ்வாறு தனது அஞ்சலி செய்தியில் தெரிவித்துள்ளது ஆஸ்திரேலிய இலங்கை மாணவர் கல்வி நிதியம்.

அந்த நிதியத்தின் தலைவர் லெ.முருகபூபதியால் ஊடகங்களுக்கு வழங்கப்பட்ட அஞ்சலி செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

நீண்டகாலமாக சமூகப்பணியாற்றி வந்திருக்கும் யோகநாதனின் (வயது 73) திடீர் மறைவால் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் யாழ். சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் பணியாளர்களுக்கும் மற்றும் யாழ்ப்பாணம் - முல்லைத்தீவு மாவட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் ஆஸ்திரேலியாவில் இயங்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியம் என்பன ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அமரர் யோகநாதன் யாழ். சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் ஊடாக யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு கிளிநொச்சி, வவுனியா முதலான மாவட்டங்களில் வசிக்கும் போரால் பாதிப்புற்ற ஏழைத் தமிழ் மாணவர்களுக்கு உதவும் வெளிநாடுகளிலிருந்து இயங்கும் தன்னார்வத் தொண்டர் அமைப்புகளின் தொடர்பாளராகவும் அர்ப்பணிப்புடன் இயங்கியவர்.

அன்னாரின் திடீர் மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பு என்று ஆஸ்திரேலியாவிலிருந்து இயங்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியம் தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளது.

அமரர் யோகநாதனின் குடும்பத்தினருடன் ஆழ்ந்த துயரத்தில் பங்கேற்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம் எனவும் அனுதாபச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 15 வயது சிறுமி மீது துஷ்பிரயோகம்; விசேட வைத்திய நிபுணரும் கைது

15 வயது சிறுமி ஒருவரை இணையத்தினூடாக பாலியல் நடவடிக்கைகளுக்காக விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

33 வயதுடைய நபர் ஒருவரும் விசேட வைத்திய நிபுணர் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்புக்கு அருகில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் கடமையாற்றும் குறித்த வைத்தியர் பண்டாரகம பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இணையத்தின் ஊடாக குறித்த சிறுமியை பெற்று பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார் எனக் குறித்த நபருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த இருவருடன் இதுவரையில் இந்த சம்பவம் தொடர்பில் 34 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

# பாடசாலை மாணவன் வவுனியாவில் மர்மசாவு

வவுனியா - தோணிக்கல் பிரதேசத்தில் பாடசாலை மாணவன் ஒருவர், மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

தோணிக்கல், லக்சபான வீதி பகுதியைச் சேர்ந்த உதயசந்திரன் சஞ்சீவ் (வயது 15) என்ற விபுலானந்த கல்லூரியில் தரம் 10 இல் கல்வி பயிலும் மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவன் நேற்று திங்கட்கிழமை இரவு, தனது பெற்றோருடன் வீட்டில் இருந்துள்ளார்.

இந்நிலையில் இன்று (செவ்வாய்க்கிழமை) காலை, மகனை தூக்கத்திலிருந்து எழுப்புவதற்காக அவரது பெற்றோர் படுக்கையைப் பார்த்தபோது மகனைக் காணவில்லை.

இதன்பின்னர் மகனைத் தேடிய போது, வீட்டின் வெளிப்பகுதியில் காயங்களுடன் சடலமாக கிடப்பதை அவர்கள் கண்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து சம்பவம் தொடர்பாக அறிந்து அந்த இடத்திற்கு வருகைதந்த தடயவியல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் மாணவர்களுக்கு தொலைக்கல்வி நடவடிக்கை





கொவிட் தாக்கம் காரணமாக பாதிப்படைந்துள்ள மாணவர்களுக்கான கற்றல் செயற்பாட்டை முன்னெடுக்கும் வகையில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் தொலைக்கல்வி நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் ஆரம்ப நிகழ்வு நேற்று (திங்கட்கிழமை) காலை பாடசாலையின் கணினி கற்றல் வள நிலையத்தில் அதிபர் ஆ.லோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

பிரதேச தொலைக்கல்வி மத்திய நிலையங்களை ஸ்தாபித்தல் தொடர்பான கல்வி அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய வவுனியா மாவட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் ஒரு பிரதேச தொலைக்கல்வி மத்திய நிலையமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம், கொவிட் விடுமுறை காலத்து கற்றல் செயற்பாடுகளின் போது இணையத்தள வசதிகள் அற்ற தரம் 11 மற்றும் தரம் 6 இனை சேர்ந்த 20 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் நடைபெற்றன. இது தொடர்ச்சியாக தரநீதியாக நடைபெறவுள்ளது.

மாவட்ட ரீதியான இந்த ஆரம்ப நிகழ்வுக்காக வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழு இணைத்தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய குலசிங்கம் திலீபன், வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன் உள்ளிட்டோர் வருகைதந்து நிகழ்வை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தமையுடன், பாடசாலை அபிவிருத்தி தொடர்பில் அதிபருடன் கலந்துரையாடி இருந்தனர். இதேவேளை, நாடளாவிய ரீதியில் 2 ஆயிரம் மத்திய நிலையங்களில் இந்த நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.07.2021இல் வெளியிடப்பெற்றது.